**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : DVC 4/2025**

**Prosecution witness : ம.சா.1** **Date : 10.07.2025.**

| | |
|---|---|
| **Name : நித்யா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) எந்த பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டி தாக்கல் செய்துள்ளேன். வேறு எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் ஆமாம். அவர் என் மீது விவாகரத்து கோரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததால் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய நகை, பொருட்கள் ஆகியவற்றை நான் திரும்ப எடுத்து என் வசம் வைத்துள்ளேன் என்றால் ஆமாம்.

2) என் பெயரில் உள்ள பள்ளி சம்மந்தமான எந்த ஒரு ஆவணமும் எதிர்மனுதாரர் வசம் இல்லை என்றால் ஆமாம். எத்தனை நாட்கள் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் இரண்டு மாதம் மட்டுமே வாழ்ந்தேன். எங்களுக்கு குழந்தை பேறு இல்லை என்றால் ஆமாம். இரண்டு மாதத்தில் எத்தனை நாட்கள் சந்தோஷமாக இருந்தோம் என்றால் 10, 15 நாட்கள் மட்டுமே இருந்தோம்.

3) எத்தனை முறை இரண்டு மாதத்தில் தகப்பனார் வீட்டிற்கு சென்றேன் என்றால் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை வந்து இரண்டு நாட்கள் மட்டுமே இருந்தேன். எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனைக்கு நீதிமன்றத்தை

அணுகுவதற்கு முன்பாகவே பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் காவல் நிலையத்தில் பேசப்பட்டது.

4) என் தொலைபேசியில் G pay எண் என்னவென்றால் 6380099501 ஆகும். அதில் வங்கி பெயர் என்னவென்று வரும் என்றால் nithiqueen என்று வரும் என்றால் இல்லை. G pay பழைய எண் என்னவென்றால் 7305473011 ஆகும். அதில் வங்கி பெயர் என்னவென்று வரும் என்றால் nithiqueen என்று வரும் என்றால் ஆமாம்.

5) எதிர்மனுதாரருக்கு குறுஞ்செய்தி நான் பழைய எண் மூலமாக அனுப்பினேனா என்றால் ஆமாம். குறுஞ்செய்தியில் உள்ள விவரம் தற்போது ஆவணம் வாயிலாக காட்டப்படுகிறது என்பதை சாட்சி பார்த்துவிட்டு ஆமாம் என்று சொன்னார். குறுஞ்செய்தி தாள் **எ.ம.சா.ஆ.1** ஆகும். என் கணவர் விவாகரத்து கோரி மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். அதில் நான் பதில் மனு தாக்கல் செய்துள்ளேன். தற்போது அந்த வழக்கை சேலத்திலிருந்து மேட்டூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்ற கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். தற்போது நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். மேற்சொன்ன ஆவண நகல்களை என்னால் நீதிமன்றத்தில் சமர்பிக்க முடியுமா என்றால் முடியும்.

ஆவணங்களை கொண்டு வர வேண்டி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/- தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.